1586

"பிஸ்மில்லாஹி"

# இஸ்லாம் மகத்துவ கீர்த்தனை.

இஃது

கூடலூர்

ஹக்கீம். S. M. J. பாவலரவர்களால்,

இயற்றப்பெற்றது.

கூடலூர் கிலாபத் காரியதரிசியான

ஹக்கீம். சி. றஹமத்துல்லா சாயபின்

விருப்பப்படி,

இதில் சென்னை ஸ்ரீமான்

வரகவி சுப்பிரமணியபாரதியாரின்

பாட்டுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கூடலூர் கிலாபத் தரும பாடசாலையின் பொருளுதவியால்

அச்சேற்றியது.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ்,

திருப்பாதிரிப்புலியூர்

ஹிஜிரி 1341-ம் ௵ றபீயுலவ்வல் ௴ 12உ

24—10—1923.

Q7:417
N23
178932

# முகவுரை.

இப்பரதகண்ட மென்னும் இந்தியாவானது மற்றைய அஷ்ட கண்டங்களினின்றுஞ் சிறப்புடைத்தென்பது முற்கால சரிதைகளால் விளங்கும். இவ்விந்தியாவில் எத்தனையோவித பாஷாதி யக்ஷர கல்விகள் இருக்கின்றனவென்பதும் ஏனையகண்டங்களில் இத்தனை கல்விகளில்லையென்பதும் கல்வியாராய்ச்சியுள்ளார்க்கு மறைந்தனவல்ல. இவ்விந்தியாவானது இத்தனை கல்விகளை யுடைத்தாயிருந்தும் அவைகளை கற்கும்முறை முற்காலத்தைப் போலில்லாமையால் கல்வி யபிவிர்த்தி குன்றி சிப்பிக்குள் பொதிந்த முத்து போல் மறைந்து கிடப்பவாயின. இக்காரணம் பற்றியே "இந்நாட்டினர்கள் கல்வி யறிவில்லா மௌடீகர்க" ளென மற்றோர் குறைகூறற் கியல்புடையோமாய் காணப்படுகிறோம். இக்குறையை நிவர்த்திப்பான் வேண்டி இக்காலத்துலவா நிற்குக் தேசபக்த சிரோமணிகள் சிலர் தத்தம் பிரசங்க பீடங்களில் "மானிடர்க்கு கடவுளருளிய சர்வ பாக்கியங்களும கல்வியுட் பொதிந்துக்கிடக்கின்றன" என்னும் மூதுரையை பலகாலும் விளக்கிக்காட்டினர். நமது பணச்செருக்கின்றிமிரானும், ஏழைத்தனத்தின் நலிவாலும் கல்வியின் பயனை யவ்வளவாய் கவனித்தோமில்லை. "இம்மை மறுமைக்கு வேண்டிய பலனைக் கொடுப்பது கல்வியே" யென்று மஹான் முகம்மது நபியவர்கள் திருவாய் மலர்ந்த சொல்லையும் நெகிழவிட்டு ஆசை யென்னும் பாசக்கயற்றுள் சிக்குண்டு கிடக்கின்றோம். சென்ற வருஷத்தில் நித்திரையினின்று சொர்ப்பனங்கண்டு விழித்தாற்போல் தென் இந்தியா கூடலூர் இந்து முஸ்லீம்கள் எழுந்து ஒரு சபை கூட்டி பேசி "கிலாபத்து தரும பாடசாலை" எனுமபிதானத்தினானே ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபனஞ் செய்தார்கள். இப் பாடசாலையில் ஹிந்து முஸ்லீம் ஆண் பெண் குழந்தைகள் சுமார் 250 வரையும் படித்து வருகின்றனர். இப்பாடசாலை பல முஸ்லீம் பெண்மணிகள் வீட்டு பிடியரிசியாலும் ஜனாப். செ. முஹம்மதலிமரைக்காயர், ஜனாப். அ. அப்துல்ஜலால் சாயபு இவர்களின் பொருளுதவியாலும் தற்காலம் நடந்தேறி வருகின்றது. இப்பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்காக செந்தமிழ் நடையில் சில பாடல்கள் செய்து தரும்படி பாடசாலை காரியதரிசி ஹக்கீம். சி. றஹ்மத்துல்லாசாயபு கேட்டுக்கொண்டபடி பாடல்களைசெய்து கொடுத்தேன். சில இந்து முஸ்லீம் சகோதரர்கள் இப்பாடல்கள் ஒரு புத்தக ரூபமாய் அச்சிட்டிருந்தால் எல்லோரும் வாசிக்க சவுகரியமாயிருக்குமென்று விருப்பங்கொண்டு அச்சிட செய்தார்கள். அதோடு ஸ்ரீமான். சுப்பிரமணிய பாரதியாரின் சில பாடல்களையும் இப்புத்தகத்தில் சேர்த்து அச்சிடவேணுமென்று சிலர் வேண்டுதல் செய்ய அதன்படியே பாரதியாரின் சில பாடல்களையும் சேர்த்து அச்சிடலானது.

இப்புத்தகம் தேவையானவர்கள் கூடலூர் கிலாபத்து தரும பாடசாலையிலும், பாரதமாதா பள்ளிக்கூடத்திலும் பெற்றுக்கொள்ளலாம.

கூடலூர் O. T
23—10—23

இங்ஙனம்,
ஆயுர்வேத யூனானி ஹக்கீம்,
**S. M. J. பாவலர்.**

# பிஸ்மில்லாஹி.

அறுசீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நீரார்ந்த கடல் புவியை வானுலகை யாதவனை நிலவல்லோனை
காரார்ந்த முகிலினத்தை தாரகையை விண்ணினரை கலப்பில்லாத
சீரார்ந்த பொன்னுலகை ஜின்னினத்தை இன்சானை சிலோச்சயத்தை
பேரார்ந்த பிறபொருளை படைத்தாளு வல்லவொரு பெரியோன் காப்பு.

## இஸ்லாமகத்துவக் கீர்த்தனை.

இராகம் சிந்தியல். தாளம் ஆதி.

அல்லாஹு அக்பரென்றே சொல்லும் அது
அவனியிற் பகைதனை வெல்லும் நமை
ஆண்டளிக்குமொரு நீண்டப்புகழ்க்குரியோன்
நாமம் சொன்னால் சேமம்.

தொல்புவி மீதில் துயரோடு தேக
சுகநிலை யென்றும் நடமாடும் தினம்
சூழ்ந்திருக்கும் நலம் வாழ்ந்திருக்கும்வய
தோங்கும் பவம் நீங்கும்.

கல்விப்பொருள் புவியில் வாய்க்கும் பல
கஷ்ட நஷ்டங்களையுந் தேய்க்கும் ஒரு
காவலன்கிருபை மேவிடற்கு துணை
யாகும் மிடி யேகும்.

இம்மையில் தவ சித்தியருளும் பல
இடஞ்சல் பகைவர் முகம் வெருளும் ஒரு
ஈடிலாதமறை தேடரும் பொருளை
ஏற்றும் புவி போற்றும் (அல்)

இந்து முசுலீம் சகோதரரே நாம்
ஏகதந்தையால் வந்த சுதரே நமை
ஏவல்கொள்ளுமொரு காவலன் விதியை
எடுப்போம் தீமை விடுப்போம். (அல்)

பாரோர் புகழும் கூடலூரில் வாழும்
பாவலர் சொன்னார் இந்தசீரில் கிலா
பத்தின்பாடசாலையில் யுத்தி படிக்கநீவீர்
வாரும் ஒன்றாய் சேரும்.

---

## கிலாபத்தின் வரலாறு.

---

தரு இராகம் மோகனம். தாளம் ஆதி.

இதுவே நொண்டிச்சிந்து.

இசுலாம் சகோதரரே நம
திறசூல் கிலாபத்தினை யெடுத்துரைப்போம்
விசுவாசமான வேதம் குருஆன்
விதித்த முறைப்படியே நபிபெருமான்

மார்க்கமும் விளங்கிடவே இந்த
மண்டலமும் விண்டலமும் பணிந்திடவே
தீர்க்கமாய் தீனுல்லிசுலாம் அரசியல்
சீராக இருபத்துமூன்று வருடம்

மக்கமாநகர் மதினா நகரிலும்
மாட்சிமை யுறநடத்தி ஆட்சிக்குரியோன்
பக்கலில் செல்லும்போது கிலாபத்தினை
பக்திமிகுந்த அபூபக்கரிடத்தில்

கொடுத்திட அவர்களுமே மதினாவில்
குருஆன் விதிவிலக்கின் படியிருந்து
திடமுடன் ரண்டுவருஷம் மூன்றுமாசம்
செங்கோலைநடத்தி பின் செம்பொன்னகரம்

சேர்ந்தபின் உமறுகத்தா பரசியல்
செய்தார் பத்தொடு அரைவருடமட்டும்
வேந்தராய் நெறிகாட்டி முகம்மதெனும்
வேதாம்பர் சொன்ன மொழிதனை நாட்டி

நீதிசெங்கோல் நடத்தி புவிதனை
நீங்கிசுவனபதி யடைந்தபின்னர்
ஓதிடுங் குருஆனை எழுதிய
உதுமானரசியல் பன்னிரண்டு

வருடஞ்செங்கோல் புரிந்து மறைநெறி
வளர்ந்திட தீன்கொடி பரந்திடவே
குருநபி மஹ்மூதின் கிலாபத்தினை
கொண்டுநடத்தி பின்னர் விண்டலஞ்சென்றார்

பகைவர்கள் கெடிகலங்க நடமிடும்
பஞ்சகதி துல்துலெனும் பரிநடத்தி
வகைதருங்குபிர றுத்த ஜுல்பகார்
வாள்கரங்கொண்ட அலி புலியெனுநம்

நபியின் பதியின்மருகர் ராஜாங்கம்
நடத்தினர் நாலாண்டு ஒன்பதுமதி
சுபகதியடைந்த பின்னர் கிலாபத்தினை
சுரதராஜ கெம்பீரரெனும் ஹசனார்

அரசியலாறுமாதம் நடத்தியே
அவர்களும் பரகதியடைந்தபின்னர்
உரமுறு நபிபெருமான் தோழர்களில்
உயர்ந்தவர் மஆவியா வெனும்பெரியோர்

திமஸ்கினிவரசியலை சீராக
செய்து கிலாபத்தினை சிறப்புறவே
சமஸ்தமும்படைத்த வல்லோன் விதிப்படி
ஜகதலம் விட்டுதான் செல்லும்போது

வசியத்து
மகன் எஜீதினையழைத்து
வள்ளல் முகம்மது கிலாபத்தரசு
அவர்களை
ஜெகம்புகழ் ஹுஸைனார்க்கும்
சேர்ந்த குறைஷிகட்கு முரியதென்று

பின்னர்
பகர்ந்திறை பாலிற்சென்றார்
பாதகன் எஜீதவன் திமஸ்கிடத்தில்
செங்கோலை
நிகரிலா கொடுமையுடன்
நீதி முறைதவறி நடத்திவந்து

கிலாபத்தினை
அவனுமே யிறந்தபின்னர்
அண்ணல் அலிபுலியின் பேரரெனும்
நெறியுடன்
புவிபுகழ் ஜெயினுலாபித்தீன்
புருகான் வேதப்படிக்குக் கொண்டுநடத்தி

கிலாபத்தினை
அவர்களுமறைந்தபின்னர்
அரசகுலதிலகர் ஹாரூன்றஷீது
அரசியலை
நவமுறும் பகுதாதில்
நடத்தி யவர்களுமே நாதனிடத்தில்

அவர்களில்
சென்றபின் குறைஷியர்கள்
சிறப்புற ஒருவரை தேர்ந்தெடுத்து
நியமித்து
வென்றிசேர் அரசரென
மிகுபுகழ் தீன்கொடி பரந்திடவே

இருக்கு
அரபொடு எமன்சாமும்
அஜமொடு பல்கு ஹிஜாஜுடனே
புவியில்
உரமுறு ரூம்மிசுறு
உயர்தலமாம் மக்கம் மதினமொடு

திமஸ்கொடு
பசறு பகுதாது
பைத்துல் முகத்திசு கூபாநகரம்
மற்றுமுள்ள
திசைபல தெரிந்திடவே
தேச ராஜர்களெல்லா மறிந்திடவே

வான்முறை யாயிருந்து    கிலாபத்து
வளர்ந்திட குபிர்நிலை தளர்ந்திடவே
பரனருள் குருஆனின்    உரைப்படி
பாரில்சன்மார்க்கமும் விளங்கிடவே

முசுலீம் ராஜாங்கம்.    நடத்தியே
முழுவுலகை இசுலா மேற்றிடவே
வசையறுந் துருக்கியரில்    உதாமன்
மன்னரென கிஸ்தந்-தன்யாவினில்

நியமித்து முடிசூட்டி    அரசியல்
நெறிநிலையுடனே நடந்திடவே
ஜெயமுர சதிர்ந்திடவே    கிலாபத்து
ஜெஜ்ஜா துல் அரபிலு மஜமிடத்தும்

குபிர்நிலை வாராமல்    குருஆன்
கூறும் விதிவிலக்கின் நெறிபுகட்டி
சுபமுற அரசாண்டு    உலகினில்
சுரதராஜ கெம்பீர ரெனவிளங்கி

தீன்கொடி பரந்திடவே    கிலாபத்தின்
செங்கோல் நெறிமுறை வளர்ந்திடவே
ீகான் உதுமான் முதலாய்    முப்பத்தேழ்
குறித்திடும் சுல்தான் முறைமுறையே

வந்தர சாண்டவரில்    வஹியுத்தீன்
மதியை யிழந்ததினால் அரசிழந்தார்
இந்தமுறையை யறிந்து    முஸ்தாபாகமால்
இடஞ்சலற்றிட கிலாபத்தை ஸ்தாபித்தார்

கிலாபத்தின் வரலாற்றை    கூடலூர்
கிலாபத்து பாடசாலை கார்யதரிசி
பலாமுறையும் வேண்ட    கூடலூர்
பாவலர் செந்தமிழில் பாடினாரே.

முற்றிற்று.

## பதம் ஹிந்துஸ்தானி.

### முஸ்தபாகமால் தீனின், ஜயக்கொடி நாட்டினரே.

ஜயக்கொடி நாட்டினரே ஜயக்கொடி நாட்டினரே!!
ஜயக்கொடி நாட்டினரே ஜயக்கொடி நாட்டினரே (முஸ்)

அஸ்தகிரிவரையும்
விஸ்தாரமாய்புகழும்
ஆளும் அரசர்களும்
வெற்றிமாலையணிந்த (முஸ்தபா)

இறசூல்கிலாபத்தார்
திறலேறவேபுரிந்த
சேற்றங்குறைந்ததனை
தீரவீரசிங்கமாய் (முஸ்தபா)

அங்கோராவில்லிருந்த
தங்கூடவேயிருத்தி
ஆழ்ந்தபுத்திமான்களை
தரியலர்களைவென்ற (முஸ்தபா)

சமர்ணாபதியிருந்து
கமணாங்கிறீக்கர்களை
சதிமோசம்செய்துவந்த
நாசமாகிடசெய்த (முஸ்தபா)

கஷ்டமிலாதிருந்த
நஷ்டமடையச்செய்த
கண்யமுசுலீம்களை
துஷ்டர்களையடக்கும் (முஸ்தபா)

சிரார்திரேவிடத்தில்
நேரில்கிராகரித்து
செய்தகொடுமைகளை
நேசர்மகிழச்செய்த (முஸ்தபா)

மலையின்மதியழைத்த
நிலைகுலையச்செய்தவர்
மன்னர்கிலாபத்தினை
நிர்தூளியாகச்செய்த (முஸ்தபா)

கிஸ்தந்தன்னியாவினில்
துஸ்மன்கணம்வெருளுந்
கேவலந்தான்விழைத்த
துருக்கிப்படைக்கதிபர் (முஸ்தபா)

கூடலூர்பாவலரால்
பாடுங்கிலாபத்பாட
கூறுந்தமிழ்ப்பதத்தை
சாலைதொண்டர்புகழும் (முஸ்தபா)

முற்றிற்று.

## இராகம் ஹிந்துஸ்தானி.

தாட்டிகமுறுஞ்ஜெய வீரதீரசூரராங்
தாரணிபோற்றுஞ் சிங்கமே முகம்மதலி
ஆரணமேற்றும் வங்கமே சர்வ
தத்துவ முடை கர்த்தனின்னருள்
வெற்றி மேவிய பக்திமானெனு
சர்ஜனரேற்றும் வள்ளளலாம் இணையிவர்க்கு
சகத்திலில்லென்று விள்ளலாம் (தாட்டிக)

மன்னுதிமன்னர்புகழ் மவுலானுனனும்பெயர்
மாநில முற்ற சீலராம் பியம்மைதவ
மாண்பினுதித்த பாலராம் பெரு
மத்த கக்கரி யொத்தவொன்னலர்
நித்தமும்பணி யுத்தமகுண
வந்தைதமிருந்த பாக்கியார் கல்வியுடையோர்
சிந்தைகளிக்கும் வர்க்கியர் (தாட்டிக)

ஞாலம்மதிக்குமுயர் ராம்பூர்நகர்பிறந்தோர்
ஞானம்விளக்குங் கண்ணியர் இரவலர்க்கு
தானமளிக்கும் புண்ணியர் திகழ்
நண்பினர்க்கொரு அன்புறுந்தகை
யின்பமேதரும் பண்புவாய்ந்தவர்
நாலாதிசையுஞ் சென்றவர் இந்தியதேச
மூலாதாரத்தில் நின்றவர் (தாட்டிக)

உதுமானியாதேசத்தின் உரிமைகிலாபத்தென்றும்
ஓங்கிவாழ்ந்திடச் செய்தவர் இந்துமுசலீம்
தாங்கியிருக்க எய்தவர் தினம்
ஒற்றுமையுற சத்தியநிலை
பற்றியேஜய முற்றிடபதம்
உரைத்தார்கூடலூர் பாவலர் கொண்டாடிடவே
உலகமுழுது மாவலர் (தாட்டிக)

# எண் சீர் விருத்தம்.

பணத்தாலே யுலகமதை ஜெயிப்போமென்றும்
பார்க்கின்றீர் அதுபலியாதப்பா
குணத்தாலே யுலகமெல்லாம் வசியமாகும்
ஹூவென்னுஞ் சொல்லிலேவினைகளோடும்
மணத்தாலே பூமாலை யாகச்சேரும்
வணக்கத்தால் சுவர்க்கபதி வாழ்வுண்டாகும்
பிணத்தோடே சேர்ந்தவரே பகீலரென்று
பேசுகின்ற கிலாபத்து தொண்டர்நாங்கள்

காட்டானை கரடிபுலி சிங்கம் யாளி
காரெருமைக்கடா காண்டா மிருகங்கூளி
கோட்டானுஞ் சிறுபுலியும் ஓனாய்சென்னாய்
குள்ளநரிகளும் ஒன்றாய் கூடிக்கொண்டு
கூட்டாளி மார்களென மனிதரென்னுங்
கோலத்தி லிருந்து கிலாபத்தென்றோதும்
நீட்டான தீன்பயிரை யழிப்போர்தம்மை
நீதியப்பால் எய்யவந்த தொண்டர்நாங்கள்.

தாராருஞ் சிக்கந்தருடைய தவுலத்தெங்கே
தடமகுட பிரவூனின் சம்பத்தெங்கே
பாராண்ட நமுறாதின் துடிகளெங்கே
பலமாக வாழ்திருந்த சத்தாதெங்கே
நீராழி யுலகிருந்த முன்னோரெங்கே
நிலையாகும் நீதியுரை குருஆன்வாக்யம்
சீராகஎடுத்துரைத்த நபிகள் கோமான்
சிறந்த கிலாபத்துவழி தொண்டர்நாங்கள்.

# தொண்டர் பாட்டு.

பதம் (பல்லவி.)

1. தொண்டர்நாங்களே இஸ்லாமிய பத்தின
தொண்டர் நாங்களே (தொண்டர்)

(சரணங்கள்.)

2. மண்டலமொடு விண்டலம்புகழ்
மாட்சிமைபொரு ஆட்சிக்குரிய
எண்டிசையுறுஞ் ஜீவர்க்கிரணம்
என்றுங்கொடுக்கும் இறைவனைத்தொழும் (தொண்)

3 ஆதியிலொரு ஜோதிரூபம்
அவனியில்மனுஜாதிரூபம்
வேதங்கொண்டுவந்திடுமகு
மூதர்பாதம்நீதம்ஓதும் (தொண்)

4. இஸ்லாமெனும் வில்லுமெடுத்து
ஈமானெனும் அம்புந்தொடுத்து
விஸ்வாசமிலாது பகையை
விளைக்கும்மனித கணத்தையடக்கும் (தொண்)

5. நபிகள்பெருமான் நமக்குக்கொடுத்த
ஞானமொழிகள் தினமும்படித்து
கெபியில்பதுங்கி தீனைகெடுக்குங்
கெருவமிருக சிரத்தையுடைக்கும் (தொண்)

6. இசுலாமதத்தின் கொள்கையதற்கு
இயன்றவுதவிபுரிந்திடாத
கசுமாலபகிலரான
கருமிகளுக்கு அறிவையுரைக்கும் (தொண்)

7. கூடலூர் கிலாபத்கமிட்டி
குறித்ததருமபாடசாலை
யீடிலாத அறபிஹிந்தி
யினிமையுடைய தமிழும்படிக்கும் (தொண்)

8. இசுலாவெனும் பேருங்கொடுத்து
இயன்றகருமந்தன்னைவிடுத்து
துசுமன்கணத்திற்குதவிபுரியும்
துஷ்டமனிதகணத்தைவாட்டும் (தொண்)

9. மீசையுடையோம் என்றுவீரம்
மிகுவாய்பேசி விளங்குந்தீனில்
தோஷம்விளைக்குங் கள்ளரென்னுந்
துரகங்களுக்கு சவுக்குகொடுக்கும் (தொண்)

10. வானம் பூமியடங்கலுமொரு
வாக்கியங் கொண்டமைத்த வல்ல
ஞானமான தானமளிக்கும்
நாதன் ஒருவனுண்டென சொல்லும் (தொண்)

11. வானலோகத்துலவி மற்றுந்
தானமீதிலிருந்து வணங்கும்
ஊனதேகமற்ற தேவர்
உண்டென்றுள்ள முணர்ந் துநின்ற (தொண்)

12. நாலுவேதமென்று சொல்லும்
நல்ல ஏவல் விலகலெல்லாம்
கோலம்யாவும் படைந்த ஏக
கோனின்வாக்கென்றுண்மை கொள்ளும் (தொண்)

13. நாதன் ஒருவன் றூதராக
ஞாலம்வந்தநபிகளோடு
ஒருவேதப்புருகான் வள்ளல்
உண்மைநபியென்றுறுதிகொள்ளும் (தொண்)

14. படைத்த படைப்புயாவும் மழிந்து
பரமனொருவனழியாதிருந்து
நடித்தமனிதர் நன்மைதீமை
நவிலும் நாளொன்றுண்டென்றுரைக்கும் (தொண்)

15. மனிதவுலகந்தன்னில் நிகழும்
வளரும் நலமும் இடருமேக
தனிமையுடையோன புறமென்றுணர்ந்து
சரிகை கிரிகையோகம்புரியும் (தொண்)

16. ஈமான் ஆறுபருலென்றுணர்ந்து
இசுலாமார்க்கத்திபல்லை புரிந்து
மூமீனென்ற பெரியோர் சொல்லை
முழுதுங்கேட்டு புவியில் நடக்கும் (தொண்)

17. தற்பரன் கிலாபத்தின்கார்ய
தரிசிஹக்கீம்றகுமத்துல்லா
சொற்படிதீனின் கொடியைபிடித்து
தொடர்ந்துபாவலர் பாட்டைபடிக்கும்

தொண்டர்நாங்களே கிலாபத்தி
தொண்டர்நாங்களே.

விண்ணுலகமேழினொடு மண்ணுலகமும்புகழும்
வேதன்புருகானுரைத்த வாக்கியம் மன
மீதினிலுறுதிகொள்வோர் பாக்கியம் மிகு
வெற்றியோடுயர் பத்தியுந்தருமத்தின்னின் பலன்சித்தியாகிடு
விளங்கிடும் கிலாபத்தினை கொள்பவர் உள்
ளங்கமேயறும் இஸலாமுள்பவர் (1)

தற்பரன்கிலாபத்தினை தாறுமாறாகவேபேசி
சத்தியமறைவிடுத்தோர் பாவியே கிலா
பத்தினர்க்கவர்கள் பச்சைநாவியே அவர்
கேடுறுவார் வாடுறுவார் ஈடிலாதபாடுறுவார்
கேவலரெனவுலகி லாகுவர் நாளை
பாவியெனவே நரகில்போகுவர் (2)

முஸ்தாபநபியுரைத்த சுத்தசத்தியமொழியை
மூதறிஞர்சொல்லதினங்கேட்டுமே பல
வாதுகள்செய்தால் கடைதிண்டாட்டமே ஒரு
வல்லவனுரைத்ததிது சொல்லருஞ்சகோதரரே
வையகம்வாழ்தீனவர்க்குசாதனம் முத்தி
யுய்யவேவழிதிறக்கும்மாதனம் (3)

இந்தியாதேசத்தில்வாழும் ஹிந்துமுசுலீங்களேநீர்
ஏற்றமேகுறைந்ததற்கு காரணம் சில
வேற்றுமைமதங்களே யுதாரணம் பல
வீணர்கள்நெறிதவறி ஆணவம்புரிந்ததினால்
வெற்றியையிழந்தடிமை யாகினர் இதை
யொற்றுமையுற பாவலர்கூறினர்.

விண்ணுலகமேழினொடு மண்ணுலகமும்புகழும்
வேதன்புருகானுரைத்தவாக்கியம் மன
பீதினிலுறுதிகொள்வோர் பாக்கியம்.

## கூடலூர் எஸ். எம். ஜெ. பாவலரால் செய்தது.

### தரு-இ-ம் சங்கராபரணம் ஆதி தாளம்.

### குறவஞ்சி.

இந்திய சகோதரரே யிங்குரைக்குஞ்சொல்லை நீங்களிங்குரைக்குஞ் சொல்லை
எடுத்து நடந்தாவினிமே லேகிடுமே தொல்லை

சந்ததமும் இறையவனை தாள்ந்திறைஞ்சல் வேண்டுமையே தாள்ந்திறைஞ்
சகோதரத்தின் வாஞ்சை மிக வைத்திருக்க வேண்டும் [சல் வேண்டும்

கூடலூர் கிலாபத் பெயர் குறிக்கும் பாடசாலை ஐயே குறிக்கும் பாடசாலை
கூடவையுடன் கல்வி பல கைத்தொழிலின் வேலை

நீடிடவே படித்து வரும் தொண்டர் படை நாங்களையே தொண்டர் படை
நேயமுற சொல்லுவதை கேட்டுணர்வீர் நீங்கள் [நாங்கள்

உலகமிசை முதலாக வந்த நபி ஆதமையே வந்த நபி யாதம்
உருவமைந்த மனிதர்க்கெல்லாம் தந்தையென்னும் வேதம்

வீலகவில்லை மனிதருக்குள் வேற்றுமை தானுண்டு ஐயே வேற்றுமைதானு
மேதினியில் ஜாதிபல ஆயினவே பண்டு [ண்டு

இற்றைக்குத்தா னாதநபி யிப்புவியில் வந்து ஐயே இப்புவியில் வந்து
ஈரைந்தி னோராயிரத்தி னோடு நூற்றினோடு

சொற்றன்ண்பத்தைத்தாண்டு கணக்கில் புவி பிறந்தோரையே கணக்கில் புவி
சோதரர்களாகு மென்று சொன்னார் கலை சிறந்தோர் [பிறந்தோர்

ஆனதினால் மனிதரெல்லாம் ஆதம் நபி பாலரையே, ஆதம் நபி பாலர்
ஆரணத்தில் சொன்னதை தானறைந்தனர் முன்னூலர்

மானமுயர் நீதி முறை யுள்ளவரே நல்லோரையே உள்ளவரே நல்லோர்
மனிதரிலே உயர்குலவான் தரும குண முள்ளோர்

பறைபரென்றும் பள்ளரென்றும் பழிப்புரைக ளில்லையையே பழிப்புறைக
பறனுடைய வணக்கமுள்ளோர் சேர்வர்சுவனெல்லை [ளில்லை

கறையுடைய மனமுடையோர் கடுரகம் போவரையே கடுரகம் போவர்
கர்த்தனில்லை மன முடையோர் காசினியில் தேவர்

வேதமெனுங் குரு ஆனின் வழி பிடித்தோர் நாளையையே வழிபிடித்தோர்
பேலவனின் சுவர்க்கபதி புகுவரந்தவேளை [நாளை

ஏதமுறுங் குபிர்நிலையை யெடுத்து நடப்போர்களையே யெடுத்து நடப்போர்
இறையவனை காணாத பாவிகளாவார்கள் [கள்

பூவுலகில் பொய்யுரையை போற்றல் புரிவோர்களையே போற்றல் புரிவோர்
புன்மையுள்ள நரகமதில் புலம்பியழுவார்கள் [கள்

கோலை செய்து கோளுரைத்து குடிகெடுக்கும் பாவியையே குடிகெடுக்கும்
குட்டமொடு நட்டபிணி கொண்டலைவர் மேவி [பாவி

சூதுவிளையாடுகின்றோர் தொல்லுலகிலென்றுமையே தொல்லுலகிலென்றும்
சூழ்வருமை மிடிமையுற்று சாவர் புவி நின்றும்

மேதினியில் பிறர்பொருளை களவுசெய்வோர் பதரேயையே களவுசெய்வோர்
வெங்காகி விருந்து நடமாடுவரே சதரே [பதரே

மன்னிப்பில்லாபாவமது கொலை புரிதல் தானேயையே கொலை புரிதல் தானே
மனிதரொடு மற்றுமுள்ள ஜீவவதை தானே

முன்னூலில் சொன்னதிது முழுமதியுள்ளோரேயையே முழுமதியுள்ளோரே
மூதறிஞர் சொன்னவழி நூலினுங் காண்பீரே

வட்டிகுத்தான் பணங்கொடுத்து வயிறெரியவாங்குமையே வயிறெரிய வாங்
மனிதருக்கு மூகங்கருத்து வந்திடுமே தீங்கும் [கும்

வட்டிதனை வாங்கியுண்போர் வயிறதுதான் வீங்கியையே வயிறதுதான்வீங்கி
மஹ்ஷரிலே பாடுறுவார் வெய்யிலிலே யேங்கி

ஏழைகளை ஏமாற்றி யிருப்பிடத்தை வாங்குமையே யிருப்பிடத்தை வாங்கும்
இயலுடையார் வாழ்வினிலே தரித்திரமே யோங்கும்

ஏழைபரின் மனங்கொதிக்க பொருளையபகரித்த ஐயே பொருளை யபகரித்து
எடுத்துக்கொள்வோர் படுவர் பிணி யெழிலுடம்பு சரித்து

அருநெறியா மிசுலாத்திற் றைந்து தொழில் வேண்டுமையே ஐந்துதொழில்
அகமிருத்தி யிருகலிமா வாயுரைத்தல் வேண்டும் [வேண்டும்

வரிசைபுறந் தொழுகையொடு நோம்பிருத்தல் வேண்டும் ஐயே நோம்பிருத்
வைததிருக்கும் பொருள்களிலே நாற்பதுக்கொன்றீண்டும் [தல் வேண்டும்

எட்டுவகை யார்க்குஜகாத் கெடுத்தளித்தல் வேண்டுமையே யெடுத்தளித்
இயன்ற ஹஜ்ஜு மக்கநகர்க் கேகிசெய்தல் வேண்டும் [தல் வேண்டும்

இட்டமுறு மித்தொழில்கள் ஏகன் சொன்னதாகுமையே யேகன் சொன்ன
எடுத்து நடப்போர்களெல்லாம் இசுலாங்களாகும் [தாகும்

தருமமதை செய்யாத கருமவினையோர்களையே கருமவினையோர்கள்
தற்பரனை வணங்கிடினுஞ் சுவனமடையார்கள்

தருமமது தலைகாக்கு மென்றுரைத்த சொல்லை ஐயே யென்றுரைத்த சொ
சாதனமென்றெடுத்திடுவோ ரடைவர் முத்தி யெல்லை [ல்லை

மானிடரின் நீதியிலே விலக்கல் மதுபானமையே விலக்கல் மதுபானம்
மற்றமுள்ள மஸ்தினங்கள் மாந்துவதும் ஈனம்

வானிலத்தின் சுவர்க்கபதி வாழ்வு கிடைக்காது ஐயே வாழ்வு கிடைக்காது
வரிசைகெட்டு தடுமாறி யலைவர் புவிமீது

பெரியோரை மதிக்காத பெருமையுள்ள சிறியரையே பெருமையுள்ள சிறி
பெரியோரின் கிருபைவிட்ட பேதமனமுரியர் [யர்

உரியோர்கள் உறவினர்கள் ஒற்றுமையை விட்டோரையே யொற்றுமையை
உத்தியொடு புத்தியற்ற பக்திநிலை கெட்டோர் [விட்டோர்

மணமுடித்த புருஷருக்கு மாற்றுரைகள் சொல்லுமையே மாற்றுரைகள்
மாதர்களை இருமையிலும் மனப்பிணியே கொல்லும் [சொல்லும்

பணம் படைத்து தருமம்விட்ட பாவிகளே கேளுமையே பாவிகளே கேளும்
பாருலகில் பொருள் குறையும் பதவி பெற மீளும்

ஆலி மூலமாக்கள் சொல்லை அவமதிப்பாய் பேசுமையே யவமதிப்பாய் பேசு
அறிவுகெட்டோர் கபுரினிலே நாகவாடை வீசும்
[ம்

நாலுகவி முத்தமிழால் நல்ல இசை பாடுமையே நல்ல இசை பாடும்
நாவலர்கள் பாவலர்கள் நற்கவியை நாடும்

அன்னை தந்தை சொல்லதனை யன்புடனே வாங்குமையே அன்புடனே வா
அவனியிலே வாழ்வுடனே ஆயுளது மோங்கும்
[ங்கும்

முன்னையவர் சொன்னமொழி நன்னயத்தை பாருமையே நன்னயத்தை பா
மூதறிஞர் அன்புமிக தம்மிடத்தில் சாரும்
[ரும்

முத்தமிழால் நாலுகவி தானமைந்தினாலேயையே தானமைந்தினாலே
முன்னூலில் மூதறிஞர் சொன்னமுறைபோல

வித்துவத்தின் கூடல் நகர் பாவலர் சொல் பாட்டு ஐயே பாவலர் சொல் பா
விதம் விதமாய் நாங்கள் சொல்வோம் மகிழடைவீர் கேட்டு
[ட்டு

தாங்குங் கிலாபத்துடைய தரும பாடசாலையையே தருமபாடசாலை
சார்ந்திருக்குஞ் சூழ்ந்தபல காரியத்தின் வேலை

ஓங்கிடவே செய்துவரும் றஹ்மத்துல்லாவென்னுக்ஹக்கீம் றஹ்மத்துல்
உத்தமரின் தொண்டர்படை எத்திசையுந்துன்னும்.
[லா வென்னும்

முற்றிற்று.

இவை

# சி. சுப்ரமணிய பாரதியார் செய்த

## சுதேச கீதங்களினின்றெடுத்தவை.

(ஹரிகாம்போதிஜன்யம்-ராகம் ஸைந்தவி-திஸ்ரசாப்புதாளம்.)

பல்லவி.

கரும்புத்தோட்டத்திலே—ஆ
கரும்புத்தோட்டத்திலே.

சரணங்கள்.

1. கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே ஹிந்து
மாதர் தன்னெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்குகின்றனரே அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையோவொரு
மருந்திதற் கிலேயோ—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றாரந்தக்
(கரும்புத் தோட்டத்திலே)

2. பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயுமிரங்கு மென்பார் தெய்வமே நின
தெண்ணமிரங்காதோ—அந்த
ஏழைக ளங்கு சொரியுங் கண்ணீர் வெறும்
மண்ணிற் கலந்திடுமோ தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே யங்கோர்
கண்ணற்ற தீவினிலே தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றா ரந்தக்
(கரும்புத் தோட்டத்திலே)

3. நாட்டை நினைப்பாரோ—எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே யன்னை
வீட்டை நினைப்பாரோ—அவர்
விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே—துன்பக்
கேணியிலே யெங்கள் பெண்க ளழுதசொல்
கேட்டிருப்பாய் காற்றே—அவர்
விம்மி யழவுந் திறங்கெட்டு போயினர்
(கரும்புத் தோட்டத்திலே)

4. நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே யந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ—ஹே
வீர கராளி, சாமுண்டி காளி.
(கரும்புத் தோட்டத்திலே)

---

## பாப்பா பாட்டு.

---

1. ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

2. சின்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வன்னப் பறவைகளைக்கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

3. கொத்தித் திரியு மந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடுமந்தக் காக்காய்—அதற்
கிரக்கப் படவேணும் பாப்பா

4. பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய் தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

5. வண்டியிழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

6. காலை யெழுந்த வுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

7. பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா
தெய்வ நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா

8. பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

9. துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்து விட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா.

10. சோம்பல் மிகக்கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி யழுங் குழந்தை நொண்டி—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

11. தமிழ்த் திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில்இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

12. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

13. வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழுங் குமரி முனை பாப்பா
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

14. வேதமுடைய திந்த நாடு—நல்ல
வீரர் பிறந்த திந்தநாடு
சேதமில்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

15. சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி-அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

16. உயிர்களிடத்தில் அன்பு வேணும்-தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்-இது
வாழும் முறைமையடி பாப்பா.

# தொண்டுசெய்யும் அடிமை.

(ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரத வாஸிக்கு
ஆங்கிலேய உத்யோகஸ்தன் கூறுவது)

(நந்தனார் சரித்திரத்திலுள்ள "மாடுதின்னும்புலையா உனக்கு—
மார்கழித்திருநாளா" என்ற பாட்டின் வர்ணமெட்டு.)

1. தொண்டு செய்யு மடிமை—உனக்கு
சுதந்திர நினைவோடா
பண்டு கண்ட துண்டோ—அதற்குப்
பாத்திர மாவாயோ? (தொண்டு)

2 ஜாதிச் சண்டை போச்சோ?—உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்—கண்முன்
நிற் கொணாது போடா. (தொண்டு)

3. அச்ச நீங்கினாயோ?—அடிமை!
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுத லொழித்தாயோ? (தொண்டு)

4. கப்பலேறு வாயோ?—அடிமை!
கடலைத் தாண்டு வாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே—அடிமை!
கொற்றத் தவிசு முண்டோ? (தொண்டு)

5. ஒற்றுமை பயின்றாயோ?—அடிமை!
உடம்பில் வலிமை யுண்டோ?
வெற்றுரை பேசாதே—அடிமை!
வீரிய மறிவாயோ? (தொண்டு)

6. சேர்ந்து வாழ்வீரோ?—உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ?—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ? (தொண்டு)

7. வெள்ளை நிறத்தைக் கண்டால்—பதறி
வெருவலை யொழித்தாயோ?
உள்ளது சொல்வேன் கேள்—சுதந்திரம்
உனக் கில்லை மறந்திடடா. (தொண்டு)

8. நாடு காப்பதற்கே—உனக்கு
ஞானஞ் சிறிது முண்டோ?
வீடுகாக்கப் போடா—அடிமை
வேலை செய்யப் போடா. (தொண்டு)

9. சேனை நடத்துவாயோ?—தொழும்புகள்
செய்திட விரும்பாயோ?
ஈனமான தொழிலே—உங்களுக்
கிசைவதாகும் போடா. (தொண்டு)

---

## தேசபக்தன் அங்கிலேயனுக்குக்கூறும் மறுமொழிகள்.

---

1. சொந்த நாட்டிற் பார்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி-யஞ்சிடோம்
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
எற்குமோ?-தெய்வம்-பார்க்குமோ?

2. வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்-முடி-தாழ்த்துவோம்
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ?-அவ-மானமோ?

3. பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளைகொண்டு
போகவோ?—நாங்கள்-சாகவோ?
அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ?—உயிர்—வெல்லமோ?

4. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ?-பன்றிச்-சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ?-பிடி-வாதமோ?

5. பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ?.மனஸ்-தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ?-இதிற்—செற்றமோ?

6. ஒற்றுமை வழி யொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம்-நன்கு-தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலா
மலைவுறோம்-சித்தம்-கலைவுறோம்.

7. சதையைத் துண்டுதுண் டாக்கினு முன்னெண்ணம்
சாயுமோ?—ஜீவன்-ஒயுமோ?
இதையத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ?—நெஞ்சம் வேகுமோ?

---

## அச்சமில்லை.

---

(பண்டாரப்பாட்டு)

1. அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே

இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

துச்சமாக வெண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை
பெற்றுவிட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

இச்சை கொண்ட பொருளெலா
மிழந்துவிட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

2. கச்சணிந்த கொங்கை மாதர்
கண்கள் வீசு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே

நச்சை வாயி லேகொணர்ந்து
நண்பரூட்டு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

பச்சையூ னியைந்த வேற்
படைகள் வந்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

உச்சி மீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

# ஜயபேரிகை.

---

பல்லவி.

ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

சரணங்கள்.

1. பயமெனும் பேய்தனை யடித்தோம்-பொய்மைப்
பாம்பை பிளந் துயிரைக் குடித்தோம்
வியனுல கனைத்தை யுமமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப் பிடித்தோம். (ஜயபேரிகை)

2. இரவியி னொளி யிடைக் குளித்தோம்—ஒளி
யின்னமுதினை யுண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடு நடுங்க விழித்தோம். (ஜயபேரிகை)

3 காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசை யெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க, நோக்கக் களி யாட்டம். (ஜயபேரிகை)

---

# முருகன் பாட்டு.

(ராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—ஆதி)

பல்லவி

முருகா—முருகா—முருகா.

சரணங்கள்.

1. வருவாய் மயில் மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

2. அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருளவாய்
முடியா மறையின் முடிவே, யசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

3. சுருதிப் பொருளே வருக.
துணிவே கனலே வருக.
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்: (முருகா)

4. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வே லவனே சரணம்! (முருகா)

5. அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய் அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய். (முருகா)

6. குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
ஸமராதிப னே சரணம் சரணம் சரணம்! (முருகா)

# இராகம் லாவணி.

1. கூடலூர் கிலாபத்து தருமபாட சாலையை
கொண்டு நடத்துங்காரிய தரிசி தரிசி — ஹக்கீம்
குவலம் புகழ்தரும் றஹ்மத்துல்லா சாஹிபை
கூடி சினேகமுற தெரிசி தெரிசி. (கூடலூர்)

2. வேதமெனுங் குருஆன் நீதி மொழியுரைத்த
வெற்றி கிலாபத்தினை நீதம் நீதம் — இந்த
மேதினி மீதினில் ஏதங்கள் தீரவே
வேண்டி முயற்சி செய்தார் போதம் போதம். (கூடலூர்)

3 இந்து முசுலீமெனுஞ் சொந்த சகோதரரை
என்றும் ஒற்றுமையுற்று வாழ வாழ — ஜெய
துந்துமி முழுங்கவே சந்தத மிரந்துரை
தனியவனருள்மிக நீழ நீழ. (கூடலூர்)

4 ஆவி ஜடலம் பொருளனைத்துந் திரணமென
ஆண்டவன் கிலாபத்திற் கீய்ந்து ஈய்ந்து — பல
பேவுந திசைகடோருங் கூவி யுரைத்தலைவர்
விண்ட மொழிகளையும் ஆய்ந்து ஆய்ந்து. (கூடலூர்)

5. தேசிய கல்வி மலர் வீசி மணந்தரவே
செய்து பல முயற்சி விண்டு விண்டு — தம்மின்
நேசர்களிடம் விசுவாச முடனுரைத்து
நிதம் நிதமவர்களைக் கண்டு கண்டு. (கூடலூர்)

6 தரும பாடசாலையை தாபனஞ் செய்து பல
சாதி பிள்ளைகளையுஞ் சேர்த்து சேர்த்து — திகழ்
பெருமை அறபி ஹிந்தி பேசுந் தமிழ்கல்வியும்
பேதமிலாது தினம் பார்த்து பார்த்து. (கூடலூர்)

7. படித்துக் கொடுத் திடவே பலவித கைத்தொழில்
பரவி பாரத கண்ட மோங்க வோங்க—செய்து
நடித்திடும் பகைவர்கள் துடித்திட என்றுமே
நாகரீகத்தை கண்டு ஏங்க ஏங்க. (கூடலூர்)

8. இத்தகைச் சிறப்புட னியற்றி காரியம் பார்க்கும்
எந்தல் றஹ்மத்துல்லா வாழி வாழி—இதை
இத்தமிழ் செய்த ஜெயினுல் கவுசு பாவலர்
சேர்ந்த தலருடன் வாழி வாழி. (கூடலூர்)

ஆமீன் ஆமீன்.
யாரப்புல் ஆலமீன்.

---

## கும்மி வர்ணமெட்டு.

பாரூர் புகழும் பழய கூடலூரில்
பண்புடன் கிலாபத்தின் கல்விசாலை
தேசாபிமானி றஹமத்துல்லா சாயபு
தீர்க்க முயற்சியால் சேர்த்து வைத்தார்

மேலான பள்ளியின் கல்வி முறைதனை
மெச்சிப் புகழ்ந்திட இச்சை கொள்வார்
செந்தமிழ் தெலுக்கும் அனபுடன் கற்றபின்
சொந்த உருது அரபி பாஷை.

மெத்தப் பயின்று வருகின்ற மாணவர்
மொத்த கணக்கில் முன்னூறாம்
வித்தைக்குதவும் முகம்மதலி: பக்தர்
சித்தங்களிப் பெய்தென்னாளும் வாழி.

செல்வ சிகாமணி அப்துல் ஜலால் சாயப்
செய்யும் அனுகூலம் வேணபட்டும்
இன்புரு மாதரும் ஈயும் பலனுழி
அன்புடன் கொள்ஓம் எல்லோரும் வாழி.

யூகமுள்ள யோகவான்களே?

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

பிரக்கியாதிபெற்ற

# பாவலர் காம்பீர மாத்திரை.

குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரையில் ஆண் பெண் இருபாலருஞ் சாப்பிடலாம். சரீர ஆரோக்கியத்தை விரும்பும் அன்பர்களே? இரவு நித்திரைக்குப் போகும்போது இரண்டு மாத்திரைகளை வாயிலிட்டு மென்று தின்று உடனே ஒன்றிரண்டு முணர் பாலாவது, வெந்நீராவது குடித்து வந்தால் ஒவ்வொரு தினமுங் காலை மலஞ் சிக்கலில்லாமல் தாராளமாய் இறங்கும். மூல வுஷ்ணத்தாலுண்டான வறட்சியை மாற்றும், பலவித வாய்வு தொந்திரவுகளை தடுக்கும், வேளைக்குவேளை நல்ல பசியை யுண்டாக்கும், கனத்த சாப்பாடுகளை ஜீரணப்படுத்தும், கபக்கட்டு, பித்த வண்டல், வெட்டைச்சூடு கைகாலசதி இவைகளை கண்டிக்கும். இரத்த விர்த்தியை யுண்டாக்கி வீரிய உற்சாக தாதுபுஷ்டியை கொடுக்கும். எப்போதும் திரேகம் திடத்தோ[டு] சுகமாயிருக்கும். 16 நாள் புசித்தால் போதும், யாதொரு பத்தியமுமில்லை

16 நாள் சாப்பிடும் 32 மாத்திரை யடங்கிய டப்பி 1 விலை ரூ 1—4—0.

ஷை 32 மாத்திரைகளடங்கிய டப்பி 6 விலை ரூ 6—0—0.

வீ. பீ. போஸ்டேஜ் அணா 6 பிரத்தியேகம்.

உலக பிரசித்திப்பெற்ற

# சிட்டுக்குருவி கிருதலேகியம்.

ஆண் வீரியத்தையதிகப்படுத்திக்கொள்ளவும், நரம்புத்தளர்ச்சிகள் பலப்படவும, நீற்றுப்போன நாதக்கட்டுப்படவும் இதைவிட லேகியம்வெறில்லை யென்று வுறுதியாய் சொல்லலாம்

40 நாள் 16 பலம் டப்பி 1 விலை ரூ. 10—0—0

20 நாள் 8 பலம் டப்பி 1 விலை ரூ 5—0—0

விலாசம்,

எஸ் எம் ஜெ. பாவலர்,

7 நெ. வீடு சங்கரநாயக்கர் வீதி,

கூடலூர் O. T. தென்னாற்கா[டு]

---

ஒவ்வொரு குடும்பத்திலுமிருக்கவேண்டியதவசியம்

# கிலாபத் ஆன்மரசம்.

உலகத்திலுண்டாயிருக்கும் எல்லா வியாதிகளையும் இந்த கிலாபத் ஆன்மரசம் கண்டிக்கும முக்கியமாய் ஜன்னிகள் 13, இசிவு வாதம் 84, வாய்வு 64, சுரம் 64, சூலை 18 இன்னும் இவைபோன்ற கடுமையானவியாதிகளை அதி சீக்கிரத்தில் நீக்கி ஆன்மசக்தியைக் கொடுக்கக்கூடியது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையும் உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகிக்கலாம்.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ 2—0—0

விலாசம்,

ஹக்கீம். சி. றகமத்துல்லாசாகிபு,

கிலாபத் காரியாலயம், கூடலூர் O. T. (S. A. Dt.)